சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2012–2013ஆம் ஆண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட 4393 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு 19.02.2018 முதல் 18.02.2021 வரை மூன்றாண்டிகளுக்கு தொடர் நீட்டிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (ப.க.(4(1))த் துறை

அரசாணை (1டி) எண்.373

நாள் 17.05.2018
திருவள்ளுவராண்டு 2049
வைகாசி 03
படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்.277, பள்ளிக் கல்வித் (அகஇ) துறை, நாள் 30.10.2012.
2. அரசாணை (நிலை) எண்.62, பள்ளிக் கல்வித் (அகஇ) துறை, நாள் 6.6.2014.
3. அரசாணை (1டி) எண்.321, பள்ளிக் கல்வித் (அகஇ) துறை, நாள் 24.05.2017.
4. பள்ளிக் கல்வி இயக்குநர் சென்னை–6 அவர்களின் கடித ந.க.எண்.011560/எல்/இ3/2017, நாள் 12.02.2018.

**********

ஆணை:–

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் 2012–2013ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டவாறு ஏற்கனவே இயங்கி வரும் உயர்நிலைப் பள்ளிகளுக்கென ரூ.4800–10000 + தரஊதியம் ரூ.1300/– என்ற ஊதிய விகிதத்தில் 4393 ஆய்வக உடனாள் பணியிடங்கள் மற்றும் ரூ.5200–20200 + தரஊதியம் ரூ.2400/– என்ற ஊதிய விகிதத்தில் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6157 பணியிடங்களை அவை நிரப்பப்படும் நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசாணை (நிலை) எண்.277, பள்ளிக் கல்வித் துறை, நாள் 30.10.2012ல் பத்தி 4க்கு திருத்தம் செய்து ஆய்வக உடனாள் என்ற பணியிடத்தை ஆய்வக உதவியாளர் பணியிடமாக மாற்றி ரூ.5200–20200 தர ஊதியம் ரூ.2400/– என்ற ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு 18.02.2017 உடன் ஓராண்டு காலம் முடிவடைந்த நிலையில் கடைசியாக 19.02.2017 முதல் 18.02.2018 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்காண் 4393 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6157 பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு காலம் 18.02.2018 உடன் ஓராண்டு முடிவடைந்துள்ளதால் 19.02.2018 முதல் ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வழங்கும்படி பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலி... ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதிக்கப்பட்டு ஏற்கனவே இ... உயர்நிலைப் பள்ளிகளுக்கென 2012–2013ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட 4393 ... உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆ... மொத்தம் 6157 பணியிடங்களுக்கு ரூ.19500–62000 நிலை–8 என்ற ஊதிய விகிதத்தில் 19.02.2018 முதல் 18.02.2021 வரை மூன்றாண்டுகளுக்கு (அ) தற்காலிக பணியிடங்களுக்கான தேவை குறித்து நிதித் துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள 6157 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> "2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – BC அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துதல் – 01 சம்பளங்கள்."
>
> (த.தொ.கு 2202–02–109–BC-0103)

இச்செலவினம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட நிதியிலிருந்து மீள பெறப்பட வேண்டும். அவ்வாறு மீளப்பெறப்படும் தொகை உடனுக்குடன் கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்:–

> "0202 கல்வி, போட்டி, விளையாட்டுகள், கலையும் பண்பாடும்–01 பொதுக் கல்வி – 102 இடைநிலைக் கல்வி – AL அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின் கீழ் ஏற்படும் செலவுகளை ஈடு செய்தல்." (த.தொ.கு 0202–01–102–AL–0003)

7. இரண்டாண்டுகளுக்கு மேல் காலியாக உள்ள பணியிடங்கள், புத்தாக்கம் செய்து நிரப்பப்பட வேண்டும். இரண்டாண்டுகளுக்கு நிரப்பப்படமால் காலியாக உள்ள பணியிடங்களின் தற்போதைய தேவை குறித்து ஆய்வு செய்து உபரி பணியிடங்கள் இருப்பின் அரசுக்கு சரண் செய்யப்பட வேண்டும்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.22514/நிதி (கல்வி II) /2018 நாள் 15.05.2018ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
திட்ட இயக்குநர்,அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டம், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை–6.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்,
சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
நகல்
நிதித் (கல்வி–II/வரவு செலவு (பொது–II) துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

## இணைப்பு

அரசாணை (1டி) எண். 373 பள்ளிக் கல்வி (ப.க.4(1))த் துறை, நாள் 17.05.2018

| வ. எண் | மாவட்டம் | அனுமதிக்கப்பட்ட ஆய்வக உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அரியலூர் | 89 | 89 |
| 2 | சென்னை | 96 | 45 |
| 3 | கோயம்புத்தூர் | 156 | 59 |
| 4 | கடலூர் | 157 | 36 |
| 5 | தர்மபுரி | 138 | 56 |
| 6 | திண்டுக்கல் | 110 | 46 |
| 7 | ஈரோடு | 121 | 32 |
| 8 | காஞ்சிபுரம் | 197 | 63 |
| 9 | கன்னியாகுமரி | 126 | 96 |
| 10 | கரூர் | 77 | 49 |
| 11 | கிருஷ்ணகிரி | 171 | 112 |
| 12 | மதுரை | 147 | 73 |
| 13 | நாகப்பட்டினம் | 113 | 83 |
| 14 | நாமக்கல் | 123 | 50 |
| 15 | நீலகிரி | 77 | 68 |
| 16 | பெரம்பலூர் | 51 | 51 |
| 17 | புதுக்கோட்டை | 162 | 31 |
| 18 | இராமநாதபுரம் | 91 | 59 |
| 19 | சேலம் | 206 | 83 |
| 20 | சிவகங்கை | 103 | 35 |
| 21 | தஞ்சாவூர் | 179 | 72 |
| 22 | தேனி | 88 | 42 |
| 23 | திருவள்ளூர் | 178 | 40 |
| 24 | திருவாரூர் | 106 | 44 |
| 25 | தூத்துக்குடி | 62 | 55 |
| 26 | திருச்சி | 149 | 20 |
| 27 | திருநெல்வேலி | 136 | 42 |
| 28 | திருப்பூர் | 103 | 48 |
| 29 | திருவண்ணாமலை | 239 | 45 |
| 30 | வேலூர் | 275 | 63 |
| 31 | விழுப்புரம் | 255 | 49 |
| 32 | விருதுநகர் | 112 | 28 |
| | **மொத்தம்** | **4393** | **1764** |

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்